தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஐப்பசி 13, சித்ரபானு-திருவள்ளுவர் ஆண்டு 2033

2002 அக்டோபர் 29, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கு நெறி."

வருவாய் அளவை அறிந்து, அதனை வகுத்து வழங்குவதே பொருளைச் சீராகக் காத்து வாழும் வழியாகும்.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 47, திரு. க. பாரமலை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

47—

அணைக்கட்டு

***6053—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், மடப்புரம் அருகிலும், கானூர் அருகிலும், வைகை ஆற்றின் குறுக்கே இரு சிறிய அணைக்கட்டுகள் கட்டி வைகையின் இருபுறங்களிலும் உள்ள கிராமங்களுக்குப் பாசன வசதி செய்து தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வைகை ஆற்றின் குறுக்கே கானூர் வெள்ளப் போக்கி மதகு அருகே படுகை அணை கட்டும் திட்டம் தலைமைப் பொறியாளர் (வடிவமைப்பு) அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாரமலை.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை, அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. இந்தக் கோரிக்கை பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பரிசீலனையை விரைவுபடுத்தி, வருகின்ற ஆண்டிலாவது நிதி நிலை அறிக்கையில் நிதியொதுக்கி, விரைவாக அந்த வேலையை முடித்துத்தர வேண்டுமென்று அமைச்சரைக் கேட்டுக்கொள்வதோடு அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், மடப்புரம் அருகிலும், கானூர் அருகிலும், வைகை ஆற்றின் குறுக்கே இரு சிறிய அணைக்கட்டுகள் கட்டி, வைகையின் இருபுறங்களிலும் உள்ள கிராமங்களுக்குப் பாசன வசதி செய்து தரும் திட்டம்—திட்ட மதிப்பீடு ரூ.317 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டு, மதிப்பீடு, சென்னை, திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டத்தில் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தில் கானூர் பிரிவு வாய்க்காலில் வெள்ளப் போக்கியின் தலை மதகு அருகில் ஆற்றின் குறுக்கே 190 மீட்டர் நீளத்திற்குப் படுகை அணை கட்டி, கானூர், பழையனூர் மற்றும் பெரமனூர் பிரிவு வாய்க்காலில் தண்ணீர் கொண்டு சென்று 10,173 ஏக்கர் பாசன உறுதியும், 4,763 ஏக்கர் இடைவெளி நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும் விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்ட பின்னர், மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெறப்பட்டு, இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

2002 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 48, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

48—

தடுப்புச் சுவர்

***8193—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் கடற்கரைப் பகுதிகளில் வாழும் மக்கள் பல ஆண்டுகளாக இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படுவதைக் கருதி, தடுப்புச் சுவர் எழுப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் கடற்கரைப் பகுதிகளில் கடலரிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிரந்தரத் தீர்வு காண, கடலுக்குக் குறுக்கே தடுப்புச் சுவர் எழுப்பும் பொருட்டு, கற்குறடுகள் (க்ராயன்) அமைப்பதற்கு—சுமார் 3.5 கி.மீ. நீளத்திற்கு—திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான திட்ட மதிப்பீடு சுமார் 95.20 கோடியாகும். இதற்கான மதிப்பீடு தமிழக அரசின் மூலமாக மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. த. ஆறுமுகம்.

திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20 ஆண்டு காலமாக, வட சென்னைப் பகுதியிலே கடல் அரிப்பு ஏற்பட்டு, கடல் அரிப்பு மூலமாகப் பல்லாயிரக்கணக்கான மீனவர் குடும்பங்கள் மற்றும் வட சென்னை, எண்ணூர் விரைவுச் சாலைகள் முழுமையான வகையிலே பாதிக்கப்பட்டு வருகின்றன. அவ்வப்போது எழுகின்ற இயற்கைச் சீற்றங்கள் மூலமாக அரசுகள் பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவு செய்து, அவற்றைத்